உ

ஸ்ரீ கணேசாய நம:

ஸ்ரீமத் ஜகத்குரு

# சங்கரபகவத் பாதாசாரியஸ்வாமிகள் தோத்திரமும்.

# ஸ்ரீதெக்ஷிணாமூர்த்தி தோத்திரமும் உபதேசமும்

இஃது.

திருவையாறு

பிரம்மஸ்ரீ சசிராமய்யர் அவர்களால்

தஞ்சை

கல்யாணசுந்திரம் முத்திராசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1922

Copy right] விலை அணா 4 [Registered.

-681

உ

ஸ்ரீ கணேசாய நம:

# ஸ்ரீமத் ஜகத்குரு
# சங்கரபகவத் பாதாசாரியஸ்வாமிகள்
# தோத்திரமும்.

# ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி தோத்திரமும்
# உபதேசமும்

---

இஃது

அடியார்க்கடியார் ஒருவரால்

இயற்றப்பட்டு

திருவையாறு

பிரம்மஸ்ரீ சசி ராமய்யர் அவர்களால்

தஞ்சை

கல்யாணசுந்திரம் முத்திராசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1922

Copy right] விலை அணா 4 [Registered.

எத் திருப்பதி யணைந்தோர்க் கெவ்வுல
கின்பும் வேம்பாம்

எத் திருப்பதி மேவுற்றோர்க் கெவ்வழி
யின்ப முண்டாம்

எத் திருப்பதி யமைந்தோர்க் கிருமையில்
பதமிங் கெய்தும்

அத் திருப்பதி க்கண்ணுற்ற வருட்குரு
சரணம் போற்றி.

உ

ஸ்ரீ கணேசாயநம:

காப்பு

வெண்பா.

தாரணிமேற் சங்கரா சாரியசு வாமிகட்குச்
சீரணிசேர் தோத்திரப்பாச் செந்தொடையல்—நேரணிய
அஞ்சுகர நாற்றோண்மூன் றம்பகத்தன் யானைமுகன்
விஞ்சுகரன் றாண்மலர்தாழ் வேம்.

# முகவுரை.

---

பொன்மன்றில் பஞ்சகிருத்தியத் திருநடனம் புரியும் சிவபெருமான், தம்முடைய உண்மைத் திருவுருவாகிய சத்தியஞானந்தத் தனிப்பெருந் தத்துவத்தை, உரிய சாதனங்கள் அவதிபரியந்தம் கைவந்த உத்தம முக்திகாமருக்கு உணர்த்தவேண்டி அருளின் மிகுதியால் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய ஸ்ரீ சங்கரபகவத்பாதராகத் திருவுருக் கொண்டெழுந்தருளின ரென்பது சிவரகசிய மகேதிகாசத்தின் நவமாம்சம் 16-வது அத்தியாயத்தினால் நன்கு விளங்கும். அந்தச் சற்குருவின் சரணாரவிந்தங்களைப் போற்றின் சர்வதுக்க நிவிர்த்தி பரமாநந்தப் பிராப்தியாகிய புருடார்த்தம் எளிதில் சித்தியாம். ஆதலின் அனைவரும் அவ்வாநந்தத்தை அடையும்பொருட்டு ஓர் பெரியரால் இயற்றப்பட்ட இந்நூல் அச்சிடலாயிற்று. இதில், ஆசார்யருடைய உண்மைநிலை, திருவுருவப்பாங்கு, பெருமை, பரம்பரை, முதலியன நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல், பரமாஸ்திகர்களுக்கு மிக்க பயனும் என்பது அடியேனது தீர்மானம்.

தஞ்சை,
துந்துபி-ஹூ
கார்த்திகைமீ

சசி. ராமய்யர்.

# மங்கலம்

## விநாயகர்துதி.

தன்னைநினையார்க்கிடர்நல்கித்தன்னைநினைக்கும்வகைசெய்து
தன்னைநினைவார்க்கின்பளிக்குந்தக்கோன்விக்கினேச்சுரனாப்
பொன்னினுயர்ந்தவிநாயகனாம்புநிதனாதித்தனிமுதலோன்
பொன்னின்கமலத்தாட்டுணையேபோற்றிவணங்கிப்புகழ்ந்திடுவாம்

## சரஸ்வதி.

வெள்ளியமலர்நறுந்தார்வெள்ளியமாமணிப்பூண்
வெள்ளியவாடைபூண்டவெள்ளியமேனியெந்தாய்
தெள்ளியசொற்களானின்றெள்ளியபுகழ்ச்சிசெய்தே
தெள்ளியசிந்தைமேவத்தெள்ளியமதிநல்காயே.

## சுப்பிரமணியர்.

அப்ரமேயவகண்டநிராமய
விப்ரபூஜிதவித்தகநன்மனச்
சப்ரமஞ்சசதோதயசின்மய
சுப்ரமண்யசுவாமிசரண்சரண்.

சரணர்காயத்தகர்மொழிவாரணம்
உரமனோமயிலூர்ந்தமெய்ஞ்ஞானவேல்
வரதசுப்பிரமண்ணியமூர்த்திநம்
பரமபூன்றன்பதமலர்போற்றியே.

அசுத்தவாசனையாமசுரர்த்தெறீஇ
விசுத்தவாசனைவிண்ணவர்க்காத்திட
இசைத்தசட்குணமென்னுமுகத்துடன்
வசித்தசுப்பிரமண்ணியம்வாழ்கவே.

## வேறு.

பன்னிரண்டவத்தைச்சாட்சிப்பண்பெனும்விழிகள்பெற்றுப்
பன்னிரண்டவத்தைதானாப்பரவுதலெனுந்தோளுற்றோன்
முன்னுளநிவிர்த்தியோடுமுயல்பிரவிர்த்திநாதன்
முன்னுறுசுப்ரமண்யமூர்த்தியன்னவன்றாள்வாழி.

பயிலுமாவரணம்விட்சேபத்துடன்மாயையென்ன
முயல்செய்தாருகன்மாசிங்கமுகனெடுசூரபன்மற்
கியமனுபகண்டவிர்த்தியென்றசேவற்பதாகை
வயமுளோன்சுப்ரமண்யவரதனன்னவன்றாள்வாழி.

மெய்த்தவரசலசித்தவெற்புகடோறுஞான
நிர்த்தனம்புரிவோனண்டநிரைகளாங்கடம்பணிந்தோன்
உய்த்திடுமாயைமஞ்ஞையூர்திசத்தரன்சித்தம்பாள்
ஒத்தவானந்தமெய்ச்சேயுயிர்க்குயிர்சுப்ரமண்யம்.

## வேங்கடேசர்.

யாங்கடேசணியாகச்சிரங்கொள்வோம்
ஏங்கடேசற்றிராமகிருஷ்ணவோ
வீங்கடேசகோவிந்தநாராயண
வேங்கடேசநின்மென்மலர்த்தாள்களே.

## வேறு.

சிறுவலிச்சிற்றுணர்ச்சிச்சேயெனைநன்னெறிக்கண்
ணுறும்வகைசெய்தேநின்றாளொன்றிடவருளாயின்றே
சறுகிலாச்சர்வஞ்ஞத்வஞ்சருவசக்தியுமனாதி
பெறுமுயர்வேங்கடேசப்பிரபுநாராயணாவோ.

## வேறு.

சனித்தோருஞ்சிரவணத்தாலனுமானுமுயர்கீர்த்
தனத்தினால்வான்மீகன்றியானத்தாற்சீதை
தனிப்பாதசேவனத்தாற்பரதனுமர்ச்சனையாற்
சபரியும்வந்தனத்தினால்விபீஷணனுமடிமை
வனப்பால்நல்லிலக்குமணன்சக்கியத்தாற்சுக்ரீ
வன்றானுமாத்மநிவேதனத்தினாற்சடாயு
இனப்பாசமகன்றுதனையடையவருள்புரியு
மிராமபிரானிராகவன்சீரிணைமலர்த்தாள்போற்றி.

## ஆஞ்சனேயர்.

வாஞ்சிதந்தருவான்வயிராகவான்
காஞ்சனத்தொளிர்கண்ணனுமான்புமான்
எஞ்சலாவவிராமவிராமவென்
ஆஞ்சனேயனடிமலர்போற்றுவாம்.

வேறு

மனுவுயர்புந்திவாக்கின்வன்மையேநோயிலாத
தனுவொடுபலம்புகழ்ச்சிதைரியமச்சமின்மை
துனுமசாட்டியமிவற்றைத்துகளிலாவாயுமைந்தன்
அனுமனைநினைத்தலாலேயமைவுறப்பெறுவரன்றே.

நடேசர்.

அகத்தினின்றேயனைத்துமாகியுமொன்றுமாகாச்
சுகத்தனிநிலைமெய்ஞ்ஞானிதூயயோகிக்கென்றோர்வான்
திகழ்த்துசிற்றம்பலத்தேதிருநடம்புலிக்காலற்கும்
நகப்பதஞ்சலிக்குமாச்செய்நடேசர்நற்றாள்கள்போற்றி

வேறு

எத்தவமுனூற்றினோருமெய்துதற்கரியதூய
முத்திநன்னிலையையீண்டேமுறையொடுதரிசிப்போர்கள்
சித்தவன்மலங்களெல்லாஞ்சிதைவுறப்பெற்றேயெய்தத்
தித்தோம்தித்தோமென்றாடுந்திகம்பரன்சரணம்போற்றி.

சந்ததந்தன்பால்வந்துதனைத்தரிசித்தோரெல்லாம்
விந்தையாமான்மஞானம்வியனுறவீண்டேயெய்திப்
பந்தமதொழியப்பெற்றுப்பரமவின்பெய்துமாறு
தந்தோம்தந்தோமென்றாடும்தற்பரன்சரணம்போற்றி.

சிவகாம சுந்தரி.

சொல்லையுமனத்தையுந்தான்றுளக்கியேயண்டகோடி
எல்லையின்புறத்துமுள்ளுமிலங்குவையினிதேயன்பர்
வல்லையேபெறநினைத்தவரமெலாமளித்தாட்கொள்வாய்
தில்லைநற்சிதம்பரத்தேதிகழ்சிவகாமித்தாயே.

சிற்சபைதனினடேசர்திருநடம்புரிதல்கண்டு
வற்பொடுசந்ததந்தான்மகிழ்சிவகாமித்தாயே
தற்பரையேபவானிசங்கரியிமயவல்லி
பொற்புமாதேவியேநின்பொன்னடிபோற்றிபோற்றி.

வேறு

சிதம்பரத்தேதிகழ்பொன்னம்பலத்திற்றிருநடனம்
நிதம்பரமேசன்செயக்கண்டுளமகிழ்நின்மலிநின்
பதம்பரவித்தொழவேயிடர்மோகம்பவமகலும்
விதம்பரபத்திநல்காய்சிவகாமிமெய்வித்தகியே.

அம்பிகை.

செங்கெலம்மை திரிபுரசுந்தரி
தன்னையொக்குஞ்சசிபரமேஸ்வரி
என்னையாளுமிறைவிமனோன்மணி
அன்னைவாமியென்னம்பிகைதாள்சரண்.

இன்னல்தீர்க்குமெழிலபிராமிதேன்
கன்னலின்சொற்கவுரிமகேசிவே
றுன்னல்போக்குமுருத்திரையாமளை
செங்கெலம்மைசெழுங்கழல்போற்றியே.

வேறு.

வாக்குடன்சிந்தைக்ககோசரமுமாய்ச்சத்தை
வடிவமாய்ச்சித்துருவமாய்
வளமருவுநித்யபூரணவகண்டானந்த
மயமாம்பராசத்தியாய்ப்
பாக்கியத்திச்சைஞானத்தொழிற்சத்தியாய்ப்
பஞ்சசத்திகளாய்நவ
பாகசத்திகளாயனந்தகோடியுமாய்ப்
பரந்தசத்திகளுமாகித்
தேக்கிடும்பார்வதியுருத்திரைபவானியே
திரிபுராம்பிகைசாம்பவி
சிவையெண்புயத்திமுக்கண்ணிமரகதவல்லி
தேவியாமளைகவுரியே
மாக்கவின்கருணைநிறைவேவாமியபிராமி
மாதங்கிதிரிசூலியே
மைந்தனேற்கருள்வாய்மனோன்மணிதடாதகைநன்
மதுரைமீனாட்சியுமையே.

சொரூபவணக்கம்.

பரமசாட்சாத்காரசமசச்சிதானந்த
பகவகாரணசுபாவ
பதார்த்தகூடஸ்தகேவலமோனதன்மய
பராபரசனாதனபத
சொருபசைதன்னியமகத்துவவிலக்கிய
சுயஞ்சோதிபரநிதான
சுத்தநித்தியமுத்தபுத்தவாத்துமபோத
சூக்கபிரதானவஸ்து

பிரமகைவல்லியபுராதனபரம்பர
பிரஞ்ஞானவந்தரங்க
பிரசன்னவைக்கியவியோமபரிபூரண
பிரத்தியக்குத்திருக்குத்
துரியபரமார்த்தவானந்தோகதற்பர
சுயம்புபொருளேகஞான
சுவானுபவசகசதத்துவசேத்திரஞ்ஞவோம்
சொப்ரகாசாயநமவே.

தத்துவாதீதவுபசாந்தசருவர்பாவ
சர்வகததேஜோமய
சகவிலட்சணசகோதயவவத்தாத்திரய
சாட்சித்வசர்வபாத்ய
நித்தியானந்தசித்தாந்தநாதாந்தநிப
நிலயநிர்வாணசோக
ஞேயஞாதுருஞானரகிதமாயாதீத
நிகமார்த்தவத்தியான்ம
வித்தியாதீதசருவாவரணரகிதநிர்
விட்சேபவிகிர்தரூப
விஞ்ஞானதுரியதுரியாதீதபிரபோத
வேதாந்தவதிரகசிய
சித்தலயபஞ்சப்பிராந்திரகிதப்பரிச்
சேதரகிதத்திரிகுண
தீதபாவாபாவரகிதசாயுச்சிய
சிதாகாயதேவநமவே.

## சதாசிவ பிர்ம்மஸ்துதி.

புகழ்மேவுசுருதிமிருதிகளாதிசாரமாம்
பொருளையுகத்தொடுமனு
போகமாவடமொழியினன்னூலனந்தம்
புனைந்துவெளிசெய்தினிமையாய்த்
திகழ்தீரவைராக்கியத்தோடுபரயோக
சித்திகளனேகமெய்திச்
செகமுளாருய்யுமாறதிசயச்செயல்கள்பல
செய்துகலைவல்லோர்களை
மிகவாதிலபசயமுறக்கண்டுகுருமொழியின்
மேன்மைசால்மௌனமுற்றே
மேதினியெலாமுலவியுபர்ஞானநிதியாய்
வியன்பரமசாந்தனுகித்

தகவாயநெருவூரினிற்காவிரித்தென்
றடங்கரையின்வில்வநீழற்
றங்குபரிபூரணசதாசிவப்பிரமமிரு
தாண்மலர்கள்சயபோற்றியே.

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரியஸ்துதி.

சீராருநான்மறைச்சிரமொளிர்சுயம்புவாய்ச்
சிற்கனாநந்தசத்தாய்ச்
செறிமயலகன்றுளோர்சித்தத்துணின்றிலகு
தீஞ்சுவைத்தெள்ளமிர்தமாம்
நேராருமெதனிருப்பாலிவையெலாமுற்று
நின்றிடுமெதன்விளக்க
நிகழ்வினாலிவையெலாநிகழுமெதனின்பா
னெருங்குமிவையின்பமாகும்
பாராருமப்பரம்பொருளேயுலோகோ
பகாரார்த்தமாகவித்தை
பண்புபரபத்திநல்லன்பொடுவிவேகாதி
பரவியெங்கணும்விளங்கக்
காராருநீள்பொழிற்காலடியிலேவந்து
காஞ்சிபுரத்தமர்ந்த
கயிலையிறையாகுமச்சங்கராரியனடிகள்
கருதியஞ்சலிசெய்குவாம்.

ஸ்ரீ சத்குருநாதஸ்துதி.

மாட்சிஞானநித்தனேசாந்தமதியமே
மவுனவாரிதியேகுண
வரையேயருட்பயோதரமேசுவாநுபவ
மழையேசுகப்பெருக்கே
மோட்சவுலகரசேபுணர்ப்பற்றபோகமே
மூவாதவான்செல்வமே
முன்புதோன்றாததுணைவாராதவரவே
முளைத்தெழாவாரமிர்தமே
நீட்சியுயர்வொப்பிலாமாணிக்கமேபெரிய
நிறைவேகளப்பில்பொன்னே
நித்தியசுபாவசஞ்சீவியேநந்தாத
நிலைவிளக்கேயெதிரிலாக்
காட்சியேகோதறுகரும்பேகெடாதமுக்
கனியேதெவிட்டாததேன்
கண்டேயெனாதுகண்மணியேயெனுயிரே
கடைக்கணித்தெனையாள்கவே.

உ

ஸ்ரீ கணேசாய நம:

காப்பு.

வெண்டா.

அவனிமிசைச்சங்கராசாரியன்பொற்றூளைத்
துவனியுறப்பாடித்துதிக்கப் — பவனிக்
குணநீதன்மெய்ஞ்ஞானக்குஞ்சரமுக்கண்ணன்
கணநாதன்பொற்பதமேகாப்பு.

[ நூல். ]

பன்னிருசீர்விருத்தம்.

திருமருவுபரமஹம்சப்பரிவிராசகத்
தேசிகப்பதவாக்கியச்
சித்தபிரமாணபாராவாரபாரீண
திவ்யவட்டாங்கயோகத்
தெருளனுட்டானநிட்டதபச்சக்ரேச
சின்மயவனுதியினவச்
சின்னசற்குருபரம்பரையின்பிராப்தசத்
தியசட்கதரிசனச்சீர்
தருதாபனுரியவியாக்யானசிம்மா
சனுதீசுவரநிகிலவே
தாகமச்சாரவிருதயசாங்கியத்திரய
தத்துவப்ரதிபாதக
சருவவைதிகநெறிப்பிரவர்த்தகச்சகல
தந்திரசுதந்திரயதித்
தமசங்கரப்பகவபாதவாசாரிய
சரோசசரணந்தஞ்சமே. (1)

சுத்தநித்தியமுத்தசத்யபரமானந்த
சொப்ரகாசத்தத்துவ
சொரூபமாயருவமாயுருவமாயொன்றாய்த்
துலங்கிடுமனேகமாகித்
தத்தியேயாவுமாயல்லதாய்நிகழ்பரா
சக்தியாய்நாரணனுமாய்ச்
சார்பிரமனுய்வசிட்டனுமாயொர்சத்திமுனி
தானுய்ப்பராசரனுமாய்ப்

பத்ததிவியாதனுய்ச்சுகமுனிவனுய்க்கௌட
பாதகோவிந்தபாத
பரமகுரவருமாகியட்டாங்கயோகானு
பவதவச்சக்ரேச்வர
எத்தனச்சகலநிகமாகமத்தின்சார
விதயவைதீகமார்க்கத்
திலகும்யதீசுவரசங்கராசாரிய
னெழிற்பொற்பதம்போற்றியே. 2)

பரிசுத்தமாய்த்துன்பமற்றதாயெண்ணப்
படாததாய்க்காணரியதாய்ப்
பகர்முடிவிலாதவுருவங்களுளதாகியே
பரமமங்களசொருபமாய்
வரமிக்கசாந்தமாய்மோட்சசுவரூபமாய்
மாயையின்காரணமுமாய்
மற்றுமுதலிடையீறிலாததாயொன்ருகி
மன்னியெங்கணுநிறைவதாய்
அரிறற்றஞானசுகசொருபமாயுருவமில
தாகியாச்சரியகரமாய்
அகிலசாட்சியுமாகியஞ்ஞானபாகியமு
மாய்ப்பூதம்யாவினுக்கும்
திரமுற்றகாரணமுமாய்த்தன்னில்யாவுந்
தெரித்தெவையினுந்தானுமாய்த்
திகழ்சங்கராசாரியப்பரமகுருபதஞ்
சென்னியொடுசிந்தைசேர்ப்பாம். (3)

வருமாய்வுபவமற்றுமானுருவகன்றே
மகாபுருடசேட்டனுகி
வடிவுபோற்றுமந்தணர்திலகசந்யாச
வரனுகிநிர்க்குணமுமாய்த்
திருமேவுசர்வகுணநிதியாகிநிட்கிரிய
சிவமாய்ச்சதாசாரசற்
சீலனுய்மனமொழிக்கரியவதிரகசியத்
தெய்வமாய்க்காலம்வத்து
விருதேசமாகிநிட்பிரகிருதியாய்ச்சீவ
ரீசனுப்பந்தம்வீடற்
றிவைகளுக்கேதுவாஞ்சக்தியுளதாயிவைகள்
யாவுமேயில்லாததாய்ச்

சருவாதிபதிபாபவருண்ஞானகதியாய்ச்
சதோதயபரப்பிரமமாஞ்
சங்கரகுருப்புனிதனங்கிரியிணைப்பணிதி
தங்கமுடிவைப்பமினிதே (4)

எழுதரியமறைநெறியிளித்தியாநித்திய
வியற்கைவத்துவின்விவேகம்
இகாமுத்திரார்த்தபலபோகநல்விராகமோ
டிலகியசமாதிசட்கச்
செழியசம்பத்துடன்முமுட்சுத்துவம்பெற்ற
சீடர்கட்குண்மையருள்வான்
சீவகாருண்ணியம்பாசவைராக்கியஞ்
சீர்கொளீசுரபக்தியே
ஒழிதலறுபிரமஞானந்திகழமோனவிண்
ணுலவுசின்மார்த்தாண்டனு
யுபசாந்தமதிகருணைமேகங்குணக்குன்ற
முயர்சுகோததியுமாகித்
தழுவிவருகாவியுடைமுண்டிதம்பொலியவே
தண்டமொர்கமண்டலங்கொள்
சந்யாசமூர்த்தமாயமர்சங்கராரியன்
சரணமலர்புனைவாமரோ. (5)

மன்னுநிட்பிரபஞ்சவசீரவப்ராண
மயமாய்நிரிந்திரியமாய்
மற்றுநிரகங்காரமாயசங்கற்பமாம்
வடிவாய்நிரஞ்சனமதாய்
இன்னணமசூனியமுமாய்ச்சர்வசாக்ஷியா
யேகசத்தாயகண்ட
வின்பகனமாயசமையாயசங்கமுமாகி
யெவையுமாயல்லதாகி
அன்னியமிலாததாபருவம்விகாரமா
யற்புதநிரற்புதமுமா
யனுதிநித்தியமுக்தசுத்தநத்துவமா
யனந்தமாய்நிர்க்குணமுமா
யுன்னிடவுரைப்பவரிதாய்ச்சுயஞ்சோதியா
யொப்புயர்விலாதகருணை
யுருவமாயொளிர்சங்கராசாரியப்பகவ
னுபயசரணஞ்சரணமே. (6)

மிளர்புத்தியின்சாட்சியாய்மிகுபிரீதிக்கு
விஷயமாய்மனவாக்கினின்
மேவாததாயாதியந்தமற்றதுவாய்
விளங்குசத்தாமாத்திர
ஒளிமெய்ச்சுபாவமாய்ச்சிந்திக்கவரிதாகி
யுளதுமாய்விடலரியதாய்
ஒன்றுமாய்க்கிரகிக்கமுடியாததாகியே
யுற்றசாமானியமுடன்
எளிதின்விசேஷங்களற்றதாய்த்திரமாகி
யிருள்சுடரிலாததாகி
எங்குநிறைவாகியேமாறுதலிலாததா
யிணையுபாதிகளிலதுமாய்த்
தெளியின்பவாரியாய்ச்சூக்குமமுமாய்ச்சுத்த
சிவமாகியத்துவிதமாய்த்
திகழ்தருஞ்சங்கராசாரியசுவாமிகள்
செழுங்கழற்சரண்வாழ்கவே. (7)

அறுவகைக்கோசமற்றாறுபகையற்றுள்ளு
ளாய்த்தேசகாலமற்றே
அடர்பந்தமற்றில்லையென்பதற்றேயகண்
டாகாரமாய்க்குணமிலா
துறுசகமிலாததாய்முக்தமாய்முக்தியற்
றுண்மையுடனின்மையற்றே
யொன்றாயனந்தமாய்ப்போக்குவரவற்றதா
யுயர்சத்தின்வேறலாதாய்
மறுகுமுடல்பத்திந்தியங்களொடுபுந்திமன
மற்றகங்காரமலதாய்
வளர்பிராணன்மாயையல்லதாய்ப்பிரகிருதி
வடிவலாதொருசாட்சியாய்
இறுகியகருத்தாவலாதுபோக்தாவலா
தியல்சச்சிதானந்தமா
யேகபரமாஞ்சங்கராசாரியப்பிரா
னிணைமலர்ப்பதம்வாழியே. (8)

புகழ்மேவுசதுர்மறைச்சிரமொளிர்சுயம்புவாய்ப்
பூரணானந்தசத்தாய்ப்
புகலநினைதற்கரியசர்வசாட்சியுமாய்ப்
பொலிந்திடுபரப்பிரமமாய்த்

திகழ்காளகண்டதிரிநேத்திரமுமான்மழுச்
செங்கையுமைபங்கொடுபுலிச்
சீருரியுடுத்தைந்தொழிறகதிபனுய்க்கயிலை
சேர்பரமசிவனுமாகிச்
சகமீதுநால்வர்க்கனுக்கிரகமுறைமவுன
தக்ஷிணமூர்த்தியாயுந்
தண்கருணைமேனிகொடுமானுடர்க்கெளிதினிற்
றத்துவமுணர்த்தும்வண்ணம்
நிகமாதிபொருள்வெளிப்படவத்துவிதமார்க்கம்
நிலைபெறப்பரமஹம்ஸ
நெறிமருவுசங்கராசாரியன்பொன்னடிகள்
நெஞ்சினெடுசென்னிவைப்பாம் (9)

எங்கணும்யாவுமாயென்றுமேயன்பர்க்
கிரங்கிடுமனுதிமுக்த
வீசனெடுபந்தமுத்திக்குரியசீவர்தி
ளெண்ணில்புவனங்கள்போலாய்ப்
பொங்குமாமாயையாற்றோறறியுமதல்லாத
பூரணசுயஞ்சோதியாய்ப்
புனிதவுபசாந்தமாயியன்மகாமௌனமெய்ப்
பொருளாய்ச்சுகாகாரமாய்ப்
பங்கமில்கருணையான்ஞானமுணர்காவியுடை
படர்மனேலைதண்டமோர்
பாவனைநிலைக்கமண்டலம்வாசனுக்ஷைப்
பதமுண்டிதங்கொள்யதியாய்த்
துங்கபத்திரை திகழ்சிருங்கநற்கிரியிற்
றுலங்கிடுமடாலயநிகழ்
சூரியனெனுஞ்சங்கராரியன்சேவடிகள்
சுசியொடுவணங்குவாமே. (10)

மின்னனுடுமதியிரவியனல்சோத்திரந்தொக்கு
விழிதானுநாசிமனமே
மிகுபுத்திசித்தமொடகந்தையுள்ளங்களை
விளக்கியேயிருள்சூனியம்
துன்னுமவிவேகமொடவித்தைதத்தொடக்கறச்
சுயமேவிளங்குஞான
சோதியாய்ப்பரமார்த்தசத்தாகிநிரதிசய
சுகவடிவினேகரசமாந்

தன்னிலையினின்றேசலந்திரண்டாலியாந்
தகைமையிற்கருணையுருவாய்ச்
சகமதனையுத்தாரணஞ்செயச்சங்கரா
சாரியசுவாமிகளெனப்
பொன்னினுயர்சாரதாபீடத்தெழுந்தருள்
புராணசாட்குண்யநிதியாம்
புனிதநம்பகவனிருபாதபங்கயமலர்
புகழ்ந்தனுதினம்பணிகுவாம். (11)

எழுதரியசுருதிமிருதிகள்புராணாகம
மெழிற்கலைகள்யாவும்பகர்ந்
தெய்தரியவிமலநிர்க்குணவசங்கற்பமா
யியல்கிரியையுருவமிலதாய்
விழுமியவகர்த்துருவபோக்துருவசங்கத்வ
விபுவாயனந்தமாகி
மெய்ப்போதசுகவேகமேவாத்துவிதசுய
விளக்கசிவமாநிகழ்ந்தே
முழுமுதன்மகேச்சுரனுயிர்த்திரள்சகங்களா
மோகமாமாயைபோலாய்
முறையினிட்காமசுபகன்மபரபத்திநெறி
முற்றிடவிராஜயோகச்
செழுமையுறஞானவிழிதந்தேசுபாவநிலை
செய்காமகோடிபீடத்
தெய்வசங்கரகுருபிரானருட்பதமலர்கள்
சிந்தையொடுசென்னிசேர்ப்பாம். (12)

ஒருமையாமுணர்வினாலுத்தமகுணத்தினா
லுயர்குரவனருண்மிகுதியால்
ஒடுங்கியவுளத்தோடுருக்குமெய்ம்மொழியினா
லோங்கிநிறைமோனத்தினால்
அருமையாநிலையினாலரியவிளையாடலால்
அகமாசைசினமறுதலால்
அறிவிக்குமுறையினாலான்மஞானத்தினால்
அமைவுறுநிதானத்தினாற்
கருணைபொலிவடிவினாற்கன்னெஞ்சினோரையுங்
கரைவுறச்செய்யும்வலியாற்
கருதரியதம்மைக்கணத்திலோர்ந்தெவருமே
கதிபெறக்காலடியினிற்

றருமசத்புருஷனுய்வந்துசார்ந்தோர்க்கெலாம்
சத்தினையுணர்த்தலாலே
சத்குருவெனக்குலவுசங்கராசாரியன்
சரண்மலர்புனைந்துய்குவாம். (13)

பதினைந்து சீர்விருத்தம்.

பூமலிசிரமேற்பிறைக்குறிநுதலிற்
பொலிதருநேத்திரசின்னம்
புயங்களிற்சூலக்குறிமிடறதனிற்
புகழ்மிகுநீலநன்னிறமும்
ஏமலிமார்பினுகசின்னங்கை
யிரண்டினிற்சக்கரங்கதைவில்
இசைதமருகசின்னந்திருவடியி
லேற்றசாமரக்குறிமேனி
ஆமலிபடிகவர்ணமாய்ப்பவிக்கு
மற்றையேவிளங்கியான்சிவனென்
றறைந்திடாதறைந்துமறையுபநிடத
மாதிகளோதிடாதுணர்ந்தே
தேமலிபலசித்திகள்சிறுபருவச்
செயலிலன்னைக்குணர்த்தியும்விண்
செல்கையுமியல்பிற்பெற்றசங்கரதே
சிகன்றிகழ்பதமிறைஞ்சிடுவாம். (14)

மனமொழிக்கரியபிரமமாயென்றும்
மன்னியேபஞ்சகிர்த்தியங்கள்
வகையுறச்சதஞ்செயுமகேச்சுரனுய்
வயங்கியுமன்பர்கள்விரும்பா
வினைகளுன்கொழித்தேயுயரனுக்கிரக
மேனிகொண்டாலநன்னிழலின்
வியன்சனகாதிநால்வருக்கருளும்
விதமெனக்காலடிநகரின்
வனையுறப்பவித்தேதுரோடகரத்தா
மலகரேபதுமபாதருமே
மகிழ்சுரேஸ்வாருநலம்பெறவருளி
வையகம்யாவையுமுய்வான்
பனிசெயஞ்ஞானவிருட்பகையெனுஞ்சிற்
பானுவாஞ்சங்கரபகவற்
பாததேசிகன்பொன்னடிகளுட்பதித்தே
பரவிமெய்யன்புடன்பணிவாம். (15)

## அறுசீர் விருத்தம்.

கங்குறுதூலசூக்ஷமகாரணநனுக்கனுவே
தங்கியசுழுத்திவிஸ்வன்றைசதன்பிராஞ்ஞனுக்கும்
பொங்குசான்றெவைக்குஞ்சான்ருய்ப்பூரணனந்தசத்தாம்
சங்கரபகவற்பாதாசாரியன்சரணம்போற்றி. (16)

பொங்கரவிந்துகங்கைபொற்சடையெண்டோண்முக்கண்
அங்கரமழுமான்சூலமவைகரந்துலகமுய்ய
இங்கரசிவசம்போவென்றேத்திடவருண்மெய்கொண்ட
சங்கரபகவற்பாதாசாரியன்சரணம்போற்றி. (17)

பெந்தமுத்திகள்சேரண்டபிண்டமேபிரதிபிம்பம்
சந்தமீரோட்டமாகத்தன்னுளேவிளங்கஞான
சொந்ததர்ப்பணவிரத்னசொரூபமாய்ப்பிரமான்மாவாய்
எந்தையாஞ்சங்கராசாரியன்சரணிருகண்ணெற்கே. (18)

துங்கராநால்வர்க்கன்றுசூக்ஷமமௌனேபதேச
அங்கராயுணர்த்திமற்றோர்க்ககிலமீதுயர்காருண்யப்
பொங்கராயெழுந்துவேதப்பொருள்விரித்துபதேசிக்குஞ்
சங்கராசாரியன்பொற்றுண்மலர்சிந்தித்துய்வாம். (19)

வெங்காரவாமகந்தைவிருச்சிகமெனுமசூயை
இங்காராகிகர்காமாதியிகந்திடவபயநல்குஞ்
செங்காராதிபசாட்குண்யசித்தனத்துவிதமூர்த்த
சங்கராசாரியன்பூஞ்சரண்மலர்சிரமேற்கொள்வாம். (20)

தொழுந்தகையுறுகாஷாயஞ்சுந்தரவேடம்வெண்ணீ
றெழுங்குருத்ராக்ஷகண்டியுயர்கமண்டலமோர்தண்டம்
செழுந்திருப்படிகமேனிதிகழ்ந்துசந்யாசமூர்த்தத்
தெழுந்தருள்சங்கராசாரியன்கழலிறைஞ்சிவாழ்வாம். (21)

மாலொடுபிரமன்காணுமாப்பெருஞ்சோதிதானே
ஆலடிதனினால்வர்க்கன்றருளியவுண்மைதன்னைக்
காலடிபணிவாரெல்லாங்கருத்தினுட்கொண்டேயுய்யக்
காலடிவந்ததந்தக்கடவுள்பூங்கழல்கள்போற்றி. (22)

சத்தியஞானனந்தத்தனிப்பரசிவமேதன்சீர்த்
தத்துவமுணர்ந்தேயிந்தத்தரணியோர்யாருமுய்ய
வித்தகசங்கரப்பேர்விரவியேவந்ததந்த
மெய்த்தவக்குரவன்பாதமிளிர்கவென்சென்னிமீதே. (23)

சங்கரகுருவேபோற்றிசச்சிதானந்தமூர்த்த
சங்காசாசாரியப்பேர்த்தனிப்பரசிவமேபோற்றி
சங்கரபகவற்பாதசம்புவேபோற்றிபோற்றி
சங்கரபகவற்பாதாசாரியபோற்றிபோற்றி. (24)

கட்டளைக் கலித்துறை.

கோஷிதநன்னூல்கள்வேதசிரங்கீதைசூத்திரங்கொள்
பாஷியஞ்செய்தோன்யதீஸ்வரன்யோகஞானனுபவ
பூஷிதன்மெய்ச்சாரதாபீடமோங்குஞ்சகத்தருபூண்
சேஷியனுவெனைக்கொள்சங்கராசாரியன்சிவனே. (25)

மொழியான்மவுனத்தினற்செயலாற்செய்திமொய்ம்பதனல்
விழியானுறுபார்வையால்விளையாடலினல்விளக்கும்
வழியால்வடிவத்தினல்மனத்தாலருண்மாமழையைப்
பொழிவானுயர்சங்கரகுருபொற்பதம்போற்றுதுமே. (26)

வெண்பா.

அவாவின்மைகீர்த்தியருஞ்செல்வஞானம்
தவாவீரியமீசத்தன்மை—நிவாசமுறும்
அப்பகவனுஞ்சங்கராசாரியவரதன்
ஒப்பிலிணைத்தாண்மலர்சார்வோம். (27)

வேதமுபநிடதமெய்ப்பிரமசூத்திரமே
யாதிபொருள்விளக்கமாநூல்க—ளோதியருள்
போதமார்த்தாண்டன்புகழ்ச்சங்கரபகவற்
பாததீர்த்தன்சரணெம்பற்று. (28)

பின்சூனியவாதபேதவாதக்கயங்கள்
மன்சாயவத்துவிதமார்க்கஞ்செல்—வன்சீயம்
வைதீகவிண்ணின்மணிசங்கரகுருவெம்
பொய்தீர்ப்போன்றாள்சயபோற்றி. (29)

இருபத்திநன்கு சீர்விருத்தம்.

இளவல்தாரேடியோடிக்குழியில்விழவிழ
வெழுந்தெழுந்தேயெடுக்கு
மியலன்னைதன்னினுமிரங்கிமிகவறிவயர்ந்
திகன்மாயையாங்குழியில்வீழ்ந்

திடர்மேவுமாந்தர்க்கெலாம்போதவமிர்தூட்டி
யேற்றியும்படிமுறையினல்
எழிற்கல்வியாவுந்தருந்தந்தையிணையோ
வெனப்பின்னர்மறுமொழியிலா

துளவொருமொழிப்பொருளுரைத்தெலாப்பொருள்களு
முணர்ந்துகொண்டிலகவைத்தும்
உறுகண்வந்தாலாதரித்துதவுமொருவயிற்
றுடனுற்பவித்தபேருக்
கொப்பெனுமொருபொழுதுநந்தமைப்பிரிகிலா
துடனுகின்றுதனதா
யுறுபொருள்களெல்லாநமக்கெனவுவந்தீந்தும்
ஒண்மகவுயிர்த்துமனைவி

வளமறப்பிரிதல்போலன்றியேயொருபோது
மனதையகலாதுநின்று
மன்னுமின்பயராதளித்துமுயிர்நீங்கினுடல்
வன்னியினெரித்தேயழும்
மைந்தர்போலாகாதுசீவனுளபோழ்தே
மதித்துடலினெட்டாவணம்
வாழவைத்திறவாதிறக்கப்புரிந்தும்
வருந்திநமையேகெடுத்துக்

கொளவுடன்பிறர்சொல்லுநன்மைகேளாதெமைக்
கூடியேமாற்றுகின்றூர்
கூர்ந்திவரெனப்பழித்திடரில்வீழ்நம்போற்
குறித்திடாதேநமதுளம்
குடிபுகுந்தேவலியநம்மையாண்டும்பயிர்க்
குறைவுவளர்பருவமுணராக்
கொண்டல்போலாதுசமயத்தருள்செய்சங்கர
குருப்பிரானடிகள்வாழி. (30)

பயன்.

அகிலப்பூண்பொன்னென்றூய்தலிற்சங்கர
பகவற்பாதன்பரசிவனேயெனத்
தகவிற்றேர்ந்தவர்தத்துவஞானமெய்ச்
சுகமுற்றெய்துவர்தூயநன்முத்தியே.

முற்றும்.

உ

ஸ்ரீ கணேசாயநம :

# ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திஸ்தோத்திரம்.

ஐங்கரன்பொற்றுள்களருட்குருவின்சேவடிகள்
சங்கரனார்பூஞ்சரணஞ்சத்தியுமை— செங்கமலப்
பாதங்கலைவாணிபங்கயத்தாளன்பொடுமெப்
போதும்பணிந்துதிப்போம்.

[ நூல் ]

வெண்பா.

சீர்மிக்கவேதசிரமும்வடநிழலும்
சார்தக்ஷிணாமூர்த்தசற்குருவே—பார்மேற்
சனகாதிநால்வர்தவப்பயனே தஞ்சம்
அனகாதமியேற்கருள். (1)

தட்சிணாமூர்த்தகுருசாமியேதற்பரனே
சட்சுவாக்காதிசெலாத்தத்துவனே—யுட்புறமில்
மோனகுருவேமுதற்பொருளேயிங்கபய
மானவனேசேயேற்கருள். (2)

கட்டளைக்கலித்துறை.

அன்னநல்லந்தக்கரணத்தயன்சுதாஞ்சனகன்
முன்னையநால்வரெனுமனமாதிமுகிழ்த்தடங்க
மின்னியெழுஞ்சுத்தமாயைக்கல்லாலடிவீற்றிருப்பா
யென்னிதயத்தேயுறுமெய்புணர்வாயிலகுவையே. (3)

தருமச்சனகசனந்தனரோடுசனற்குமரன்
வருமச்சனுதனற்காய்வடநீழல்வயங்கியமா
அருண்மெய்யுயர்தக்ஷிணாமூர்த்ததேசிகவற்புதனே
இருமையறவென்னிதயத்துணர்வாயிலகுவையே. (4)

வெளியேகருணைவிளைவேபரானந்தவித்தகனே
களியேயெதிர்சூனியத்தென்றிசைதனைக்கண்டிடுசான்
றொளியேயுயர்தக்ஷிணாமூர்த்தியேமுதலோண்குருவே
எளியேனிதயத்துறுமெய்புணர்வாயிலகுவையே. (5)

## அறுசீர் விருத்தம்

மணிகிளர்கல்லாலின்கீழ்வயங்கிவீராசனத்தே
பணிமிகுசனகனாதிபண்ணவர்க்குண்மைதேற்றுந்
தணிவில்சின்முத்திரைக்கைத்தக்ஷிணாமூர்த்தியெந்தை
அணிமலர்க்கமலப்பொற்றாளவிர்கவென்னகத்திலென்றும். 6)

நித்தியமுக்தமோனநின்மலவசங்கசுத்த
தத்துவவகண்டபோதசாந்தபூரணசின்மாத்ர
சத்தியபரமானந்ததக்ஷிணாமூர்த்தசித்த
வித்தகன்மணிமலர்த்தாள்மிளிர்கவென்சிரத்தின்மீதே. (7)

ஞேயஞாதுருஞானங்கணீங்கியேமனவாக்கெட்டா
தாயமாமௌனவாய்மைபருள்செய்சின்முத்திரைக்கைத்
தாயனான்கருணைமேனித்தக்ஷிணாமூர்த்தியெம்மான்
தூயபொன்னடிகளென்றுந்துலங்கவென்சிரத்தின்மீதே. (8)

சுபயதிவரர்கணால்வர்சூழ்ந்திடவடநிழற்கீழ்
அபயநிர்க்குணநிர்ப்பேதவச்சுதவசங்கசித்த
தபயமநிலையமாய்வாழ்தக்ஷிணாமூர்த்தியின்சீ
ருபயதாமரைமலர்த்தாளொளிர்கவென்னிதயத்தென்றும். (9)

தக்ஷிணாமூர்த்தமானசச்சிதானந்தபூன்ற
தக்ஷிணாமூர்த்தமோனதத்துவபரசொரூப
தக்ஷிணாமூர்த்ததீனதயாபரசருவாதார
தக்ஷிணாமூர்த்தஞானசற்குருசரணம்போற்றி. (10)

## எண்சீர்விருத்தம்.

தனிவளர்கல்லாலின்கீழ்த்தென்முகமாய்வீரா
சனத்தமர்ந்தேபுலியுரிவையிடைவீக்கிமுந்நூல்
நனிகிளர்மார்பொடுபடிகநிறமேனிதிகழ
நயனமொருமூன்றிலகச்சடைமகுடமோங்க
மணியொளிர்கண்மணிமாலையொடுசின்முத்திரையும்
வலக்கரங்களிலங்கமறைநூலமுதகும்பம்
பனிதளருமிடக்கரங்கடோன்றநிகழ்பரம
பதிதக்ஷிணாமூர்த்திபாதமலர்பணிவாம். (11)

உ

# ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியுபதேசம்.

## விநாயகர் ஸ்துதி.

துன்னுறுதுவந்துவங்கடொடர்வுருச்சாட்சிநீயே
மின்னுறுமளவைக்கெட்டாமிளிர்பரஞ்சோதிநீயே
யென்னுமிப்பொருளுணர்த்துமெழிற்கரிமுகன்றுட்போது
சென்னியிற்கொண்டுநாளுஞ்சிந்தனைசெய்துய்வோமே

## தத்பதம்.

**எல்லையற்றேகமாயென்னிருப்பிருந்ததென்**
**றல்லலழித்தருளண்ணலறைந்தது.**

கல்லாலினீழலமர்கண்ணுதலோனால்வருக்கும்
சொல்லாமேகுறிப்பதனாற்சொன்னதுமங்கென்னேயோ
எல்லையிலாவேகமதாயென்னிருப்பிங்கிருந்ததெனப்
பல்லோரும்பரிந்துணரப்பாங்குடனேபகர்ந்ததுவாம். (1)

## துவம்பதம்.

**சொல்பொருளின்றியேசும்மாவிருப்பவர்**
**எல்லையிலின்பமிங்கெய்திடுவாரெனல்.**

எம்மானேயெழிற்குருவேயெங்குநிறைந்தொளிர்வோனே
சும்மாவேநீயிருந்துசுட்டியதங்கேதையா
சும்மாவோர்பற்றின்றிச்சுழலுமனமிருந்திடுமேல்
அம்மாநீயேபிரமமறிந்துய்வாயருமகனே. (2)

## அசிபதம்

**தனித்திருந்துண்மையைத்தரணியிலுணர்ந்தோர்**
**இனித்திருக்கும்பதமெய்துதலெளிதெனல்.**

தனித்துநனியாலின்கீழ்த்தகுவீராசனத்தமர்ந்தே
நினைத்தொடருநால்வருக்குநேர்மையைநீயுணர்த்தியதென்
தனித்தசுகங்கைக்கொண்டேதழுவுசுகங்கைவிட்டோர்
இனித்திருக்குநிலையிங்ஙனெய்தலெளிதென்றற்கே. (3)

## உண்மையுணர்வு.

நினைத்தனுவின்பமேநிகழ்த்தற்கொணாதெனின்
உணர்ச்சியினின்பமிங்குரைப்பதெவ்வாறெனல்

துகளறவேசுயமேயாய்ச்சுடர்விட்டிங்கொளிர்வோனே
சுகமயமாநிலையினைநீசும்மாநின்றுணர்த்தியதென்
மகளிடந்தன்மணாளனுடன்மருவியவவ்வின்பதனை
நகுதாயேநவிலாளேல்நவில்வகையிங்கிதற்குளதோ (4)

## குருவுருவம்.

மானினைக்காட்டிமானினையீர்த்தல்போல்
ஊனொடும்வந்ததுமூனொழித்தற்கெனல்.

அருமறைகளறிந்தேத்துமருமணியேயற்புதமே
குருவுருவாயெதிர்வந்துகுறுகியதுமெற்றுக்கோ
ஒருமானையொருமானுலாமுடனேயீர்த்திடல்போல்
உருவங்கொண்டுற்றதுமுன்னுருவினைநன்கீர்த்தற்கே. (5)

## குருவருள்.

குருவருளின்றியேகுளிர்மதியெய்துதல்
இருநிலத்தின்றெனவெம்மானிசைத்தது.

திருக்குருவாய்க்கல்லாற்கீழ்த்திருக்கோலங்கொண்டெழுந்தோய்
திருக்குருவாமென்னிலையைத்தெளிந்தேநானுய்வதெவன்
உருக்கொண்டிங்கெழுந்தருளியுயர்குரவனுணர்த்தியதை
உருக்கமுடனுய்த்துணரினுய்ந்திடுவாயுண்மையிதே. (6)

## அதிகாரி.

சாதனநான்குஞ்சமைவுறப்பெற்றோர்
ஏதமிலின்பமிங்கெய்தற்குரியரால்.

அன்றுகல்லாலடியமர்ந்தவாதவனேயருமணியே
ஒன்றியிருந்தொருநால்வர்க்குண்மையைநீயுணர்த்தியதென்
குன்றாநாற்சாதனமுங்குறைவறவேயவதிவரை
நன்றாவன்றனுட்டித்தோர்நலமுளவந்நால்வர்களே. (7)

## பேதமதிநீக்கம்.

நானுழலாதேநானாவாகி
மேனிலையெய்தமெய்ம்மதிதருகெனல்.

நானாயும்நீயாயுமதுவாயுமெதுவாயும்
தானாயும்நின்றருளுந்தத்துவனே தற்பரனே (8)
ஊனாயுமுயிராயுமுளமாயுமுணர்வாயும்
நானாவாய்நானுழலாநலமருள்வாய்நாயகனே.

## மோனநிலை.

மோனமாநிலையினைமுழுதுறப்பெற்றோர்
ஈனமில்பதத்தினையெய்தியின்புறுவரால்.

தனிவளர்கல்லாலின்கீழ்த்தனிமோனஞ்சாதித்தே
நனிதிருந்தநால்வருக்குநலமுடனீயருளியதென்
தனியிருந்தேதனிமோனந்தளர்வறவேசாதித்தோர்
இனியுதியாநெறியெய்தியின்படைவாரென்றற்கே. (9)

## விராகம்

பரமவைராக்கியம்பாங்குறப்பெற்றோர்
உரமுடனுன்மவின்புற்றொளிர்வாரெனல்.

ஆசைதனைச்சுட்டெரித்தேபான்மாவிலமைந்துய்ய
நேசமுடனீபுகன்றநெறியதனைநவிலுதியால்
பாசமதாமாசையினைப்பகர்தோஷதிருஷ்டியினால்
ஆசறவேநீறுக்கினமைந்துய்வாயருமணியே. (10)

## தியானம்.

மிடியிலாத்தியானமேவுறுவோர்க்கே
இடையறுவின்பமிங்கெய்தனிச்சயமெனல்.

ஆலடியினீழலமர்ந்தன்பார்ந்தநால்வருக்கன்
றேலும்வகைநீகுறித்தவெழியென்றிதானியம்புதியால்
பாலதனுணெய்போலும்பரவிடுமென்றுண்மையினைச்
சாலநிதித்யாசனத்தாற்சார்ந்திடலாமிப்போதே. (11)

## அன்பு

உருகிடுமுளத்தேயொன்றிநின்றுணர்த்திப்
பெருகிடுவினையைப்பேணிநன்கறுப்பரால்.

கல்லாதவென்போல்வார்கன்மத்தாற்கருவெய்தா
தெல்லாமாமுன்னுருவையெய்துதல்தானெவ்வணமோ
எல்லாமிங்கென்னுருவமென்றழுந்தியகமுருகின்
வெல்லாமல்வினையதனைவென்றிடலாமையமிலை. (12)

## விண்ணப்பம்.

முப்பாழ்கடந்தமுழுத்துரியப்பதம்
தப்பாதெனக்குந்தந்தருள்வாயெனல்.

இப்பாலுமப்பாலுமெப்பாலுநின்றொளிரும்
ஒப்பாருமில்லாதவுயர்குருவேயுத்தமனே
முப்பாழுங்கடந்திலகுமுழுத்துரியநிலையெய்தத்
தப்பாநின்பெருங்கருணைதந்திடுவாய்தகவோனே. (13)

## ஆசி.

ஒன்றதாநிலையையுயர்குருபரானால்
நன்றதாவுணர்ந்தோர்நானிலத்துய்வரால்.

ஒன்றாமென்னுயர்நிலையையுயர்குருவாலுணர்வோர்கள்
குன்றாவந்நிலையெய்திக்குவலயத்தேவாழ்ந்திட்டுச்
சென்றேபின்வாராதசெம்மைநிலையெய்திடுதல்
நன்றாமென்றறைந்திட்டானான்மறைகள்கடந்திட்டான். (14)

## வாழ்த்து.

அன்மனம் புத்தி சித்த மகமெனு நால்வர் தன்னை
நன்மையா னோக்கி யேதன் ஞானமெய் வடிவ மெய்தத்
தென்முக நோக்க மென்னத் திகழ்த்துரு ணியத்தின் சான்றாம்
சின்மய தக்ஷி ணாமூர்த் தியின்றிருத் தாள்கள் வாழ்க.

---

## தனியன்கள்

### இருபத்தினான்கு சீர்விருத்தம்.

மாயையாந்தாருகாவனமேவுசங்கற்ப
    மாமுனிவர்பிரவிருத்தி
  மார்க்கமாந்தீயவேள்வியினின்றுவிடுசுட்டு
    மதியராவினைவிவேக
  வான்பணிகளாவணிந்துஞ்சினப்புலிதனை
    வலித்துரித்துச்சாந்தமாம்
  வத்திரமெனக்கொண்டுமஞ்ஞானமுயலகனை
    மன்சருவசாட்சியானென்

ரூயசவ்வியமாம்பதத்தான்மிதித்தே
    யகங்காரமழுவைச்சுய
  வறிவாகவுஞ்சத்தகோடிமனுவாந்துடி
    யதைச்சப்தபிரமமெனவு
  மநிர்தசடதுக்கவிர்த்திச்சூலமதுசச்சி
    தானந்தவுணர்வாகவு
  மலைதீமனத்துழைதனைச்சாத்துவீகமன
    மாகவுஞ்சிந்தையனலைத்

தூயவிர்த்திப்போதமாயுமிச்சாபாச
    சுருளையருளென்னவுமொரு
  தொழிலுமிலியானனைத்துஞ்செய்வேனெனச்
    சுடர்வலமிடக்கரங்க
  டோன்றவைத்தேமறதியாயநகுவெண்டலை
    துலங்கமவுனச்சிரத்திற்
  சூடிமற்றைக்குணப்பூதங்கணற்குணத்
    தொகையெனச்சூழவுமெலா

மேயநானெனுமிடத்தாளெடுத்தயலல்ல
    வெனுமபயமிவ்வாறுணர்ந்
  திலகுநீயேபொருளெனும்வரதமுந்திகழ
    விதயசிற்றம்பலத்தி
  னிடைப்பிரஞ்ஞாசக்திமகிழ்துரியநடமே
    விடும்பரசிவத்தையென்று
  மியன்ஞானியாம்வியாக்கிரபாதர்சிவயோகி
    யென்பதஞ்சலிகாண்பரே. (1)

### வேறு.

நிருவிகற்பநன்னிட்டைபொன்மன்றவண்
டுரியநிர்த்தனஞ்சூழும்பரசிவ
தரிசனத்தைச்சகசசமாதியா
மிரசதச்சபையின்கணுமெய்துவார்

### வேறு.

கமர்த்த ரைக்கண் மிக்க பால்க
விழ்ந்த வாற கோவகோ
அமர்த்த மைக்கண் மாதர் மீத
வாழு பறசி யோர்வுபோய்த்
தமர்த்த மற்ற சொற்க ளிற்ற
யங்கு மேழை யேணையும்
சமர்த்த ராம தாச ஸ்வாமி
தாள்கள் வல்லை யாள்கவே.

### வேறு.

சத்தியமோங்கத்தருமமேதழையச்
சகமெலாமன்பினுல்நிறைய
வித்தையேபெருகமறையவர்கோக்கள்
விளங்கிடமழைபொழிந்திடவே
நித்தியங்கருணைசெய்திடாயிகமும்
நிகழ்பரமும்பெறவுலகாந்
தத்துபற்செறிவாயெனுஞ்சிவத்துறுநாத்
தர்மசம்வர்த்தனித்தாயே.

### முற்றும்.